# PRESS NOTE

Tr. K.Vijayakumar, Commercial Inspector, O/o AE, O&M, TANGEDCO, MGR Nagar Section, K.K.Nagar, Chennai-78 convicted for three years Rigorous Imprisonment for demanding and obtaining bribe of Rs.3,500/- to take action on the application of 2 single phase connection to the house of the complainant G.Jayapaul of MGR Nagar.

The complainant Tr.G.Jayapaul, S/o.Govindaraj residing at No.2/4, Kannagi Street, Choolaipallam, MGR Nagar, Chennai-78 went to the office of the Assistant Engineer, Operation and Maintenance, TANGEDCO, MGR Nagar Section, K.K.Nagar, Chennai-78 on 03.06.2013 alongwith two application forms to get single phase connection to his two portion of his house. Since AE was not present on that day, the complainant met Tr.K.Vijayakumar, Commercial Inspector who was present in the office, received the application and promised to take action on his application and demanded Rs.7,000/ - i.e. Rs.3,500/- towards fees and Rs.3,500/- as bribe to him. On 06.06.2013 evening, the accused received Rs.3,500/- in the enroute while the complainant was proceeding to pay the fees at the AE office and told that he would pay the fees for him and emphasised his earlier demand of Rs.3,500/- as bribe to him. The accused categorically told that the action would be taken only when his demand of bribe was met out.

Since the complainant was not willing to give bribe, he preferred a complaint on 14.06.2013 against the accused Tr.K.Vijayakumar at Directorate of Vigilance and Anti-Corruption, Chennai. A case was registered in DVAC Headquarters Crime No.20/2011 under section 7 of Prevention of Corruption Act, 1988 and a trap was organised on the same day. The accused Tr.K.Vijayakumar, Commercial Inspector, office

of AE, O&M, TANGEDCO, MGR Nagar Section, K.K.Nagar, Chennai-78 received the bribe of Rs.3,500/- from the complainant, subsequently he was arrested and remanded to judicial custody.

The above said case was tried at the Special Court for the cases under the Prevention of Corruption Act, Chennai. Today (31.07.2023), the Hon'ble Special Court Judge pronounced judgement that the accused Tr.K.Vijayakumar is found guilty for the commission of the offence under section 7, 13 (2) r/w. 13 (1) (c) & 13 (2) r/w.13 (1) (d) of Prevention of Corruption Act, 1988. For the offence committed under Section 7 of P.C. Act, 1988 he is sentenced to undergo Rigorous Imprisonment for one year and shall pay a fine of Rs.1,000/- and in default to undergo simple imprisonment for 3 months. For the offence committed under Section 13 (2) r/w.13 (1) (c) of P.C. Act, 1988 the accused is sentenced to undergo Rigorous Imprisonment for one year and shall pay a fine of Rs.1,000/- and in default to undergo simple imprisonment for 3 months. For the offence committed under Section 13 (2) r/w.13 (1) (d) of P.C. Act, 1988 the accused is sentenced to undergo Rigorous Imprisonment for one year and shall pay a fine of Rs.1,000/- and in default to undergo simple imprisonment for 3 months

# <u>பத்திரிக்கை செய்தி</u>

<u>மின் இணைப்பு பெறுவதற்கான மனுவை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க ரூ.3500/- கையூட்டு பெற்ற எம்.ஜி.ஆர் நகர் பிரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக வணிக ஆய்வாளருக்கு மூன்று ஆண்டு சிறை தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு</u>

. சென்னை எம்.ஜி.ஆர் நகரைச் சேர்ந்த திரு. ஜெயபால் என்பவர் தன்னுடைய வீட்டிற்கு இரண்டு மின் இணைப்பு வேண்டி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், எம்.ஜி.ஆர் நகர் பிரிவில் கடந்த 03.06.2013 அன்று விண்ணப்பித்தார். அப்போது அலுவலகத்திலிருந்த திரு. விஜயகுமார் வணிக ஆய்வாளர், எம்.ஜி.ஆர் நகர பரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கே.கே.நகர், சென்னை என்பவர் மேற்படி மனுவை பரிசிலனை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு ரூ.3500/- செலுத்தவேண்டும் என்றும் தனக்கு ரூ.3500/- கையூட்டாக தரவேண்டும் என்றும் கூறியுள்ளார். பின்னர் 06.06.2013 அன்று திரு.ஜெயபால் அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், எம்.ஜி.ஆர் நகர் பிரிவு அலுவலகத்திற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதற்காக செல்லும்போது வழியில் புகார்தாரரை சந்தித்த எதிரி திரு.விஜயகுமார் மேற்படி பணத்தை தன்னிடம் தருமாறும் அதனை புகார் தாரர் சார்பில் அலுவலகத்தில் கட்டிவிடுவதாக கூறி பணம் ரூ.3500/- பெற்றுள்ளார். மேலும் தனக்கு தரவேண்டிய கையூட்டு தொகை ரூ 3500/-ஐ தயார் செய்துவிட்டு தன்னை அழைக்கும்படி திட்டவட்டமாக கூறியுள்ளார். திரு. ஜெயபால் அவர்கள் திரு.விஜயகுமார் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் தன்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட சென்னை எம்.ஜி.ஆர் நகர பரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக வணிக ஆய்வாளர் திரு. விஜயகுமார் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு ஊழல்தடுப்பு கண்காணிப்புத் துறையில் 14.06.2013 அன்று காலை புகார் அளித்துள்ளார்.

மேற்படி புகாரின் மீது ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.08/2013 சட்டப்பிரிவு 7 ஊழல்தடுப்புச் சட்டம் 1988 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு அன்றைய தினமே பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு. விஜயகுமார், வணிக ஆய்வாளர் அவர்கள் புகார் தாரரிடமிருந்து லஞ்சப் பணம் ரூ.3500/- பெற்ற போது கைது செய்யபட்டார்.

மேற்படி வழக்கானது ஊழல்தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் இன்று 31.07.2023 ஊழல்தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்வழக்கின் குற்றவாளி புகார்தாரரிடமிருந்து லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு ஒரு வருடம் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ. 1000/- அபராதமும், தன்னுடைய பதவியை பயன்படுத்தி லஞ்சம் வாங்கிய குற்றத்திற்கு ஒரு வருடம் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.1000/- அபராதமும், முறைகேடாக அரசு பணத்தை வைத்திருந்த குற்றத்திற்காக ஒரு வருடம் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.1000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.